PR/2018/17/T

# ஜப்பான் தூதரகம்

இல. 20, ஸ்ரீமத் ஆர்.ஜி. சேனானாயக்க மாவத்த, கொழும்பு 7, இலங்கை

தொலைபேசி: 94-11-269-3831~3, தொலைநகல் : 94-11-269-8629

மின்னஞ்சல்: cultujpn@sltnet.lk

மே 14, 2018

ஊடக அறிக்கை

## இலங்கை அரசாங்கத்தின் பயங்கரவாத எதிர்ப்பு திறனையும் பொதுப் பாதுகாப்பையும் மேம்படுத்துவதற்கான உபகரணங்கள் ஜப்பானிய அரசாங்கத்தால் கையளிப்பு

விமான நிலைய பொதுப் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாதத்திற்கு எதிரான செயற்பாடுகளின் போது இலங்கை அரசாங்கத்தின் ஆற்றலை மேம்படுத்துவதற்காக பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திதிட்ட மானிய உதவியின் கீழ் ஜப்பானிய அரசாங்கம் 102 மில்லியன் ஜப்பானிய யென்கள் ( ஏறத்தாழ 149 மில்லியன் இலங்கை ரூபா) பெறுமதியான உபகரணங்களை வழங்கியுள்ளது. இலங்கைக்கான ஜப்பானியத் தூதுவர் அதிமேதகு கெனிச்சி சுகனுமா மற்றும் போக்குவரத்து சிவில் விமானப் சேவைகள் அமைச்சர் கௌரவ நிமல் ஸ்ரீ பால டி சில்வா ஆகியோர் பிரசன்னத்தில் கையளிப்பு நிகழ்வு 2018 மேம 14ம் திகதி கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில் நடைபெற்றது.

இந்த மானிய உதவியின் கீழ் அம்புலன்ஸ்கள், திரவ வெடிபொருட்களை இனங்காணும் கருவிகள் ,விமான சேவை ஊழியர்களை காவிச்செல்லும் வாகனங்கள் ,தோல் வெப்பநிலையை அளவிடும் பொறிமுறை உட்பட விமான சேவைத்துறையின் பொதுப் பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத எதிர்ப்பிற்கு அவசியமான பரந்துபட்ட ரீதியான அத்தியாவசிய உபகரணங்கள் விமான நிலைய மற்றும் விமான சேவைகள் நிறுவனத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டன. தொழில்நுட்ப ஒத்துழைப்பு மற்றும் மானிய உதவி ஆகியவற்றின் போதான கொள்முதல் சேவைகளுக்குப் பொறுப்பாகவிருக்கும் JICS எனப்படும் ஜப்பானிய சர்வதேச கூட்டுறவு பொறிமுறை அமைப்பும் இந்த நிகழ்வின் போது பிரசன்னமாகியிருந்தது.

நாட்டின் பொதுப்பாதுகாப்பு மற்றும் பயங்கரவாத்திற்கு எதிரான திறனை வலுப்படுத்துவதற்கான இந்த திட்டமானது விமான நிலையத்தைப் பாதுகாப்பான முறையில் அனைத்து பயணிகளும் பயன்படுத்துவதற்கு வழிசெய்வதன் காரணமாக முக்கியமானதொரு பங்களிப்பாக ஜப்பானியத் தூதரகம் கருதுகின்றது. இது இரு நாடுகளுக்கும் இடையிலான இதமான நட்புறவை மென்மேலும் வலுப்படுத்தும் என நாம் நம்புகின்றோம் (முற்றும்).

********************************************************

மேலதீக விபரங்களுக்காக தயதுசெய்து பொருளாதார கூட்டுறவு பகுதியினரை தொடர்புகொள்ளுங்கள்
தொலைபேசி: 011-269-3831~3 (ext.224)